செ.வெ.எண்-05 நாள்-03.02.2017

**அரியலூர் மாவட்டத்தில் 9 மாதங்கள் நிறைவடைந்த 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் 06.02.2017 முதல் 28.02.2017 வரை தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், பொது சுகதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாம் - 2017 நடைபெறுவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (03.02.2017) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் 9 மாதங்கள் நிறைவடைந்த 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் 06.02.2017 முதல் 28.02.2017 வரை தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெறவுள்ளது. தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி அனைத்து அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு 06.02.2017 முதல் 12.02.2017 வரை அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே அளிக்கப்படவுள்ளது. 13.02.2017 முதல் இரண்டு வாரங்களுக்கு அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் பள்ளிக்கு செல்லா குழந்தைகளுக்கும் அதனைத் தொடர்ந்து 4-வது வாரம் விடுபட்ட குழந்தைகளுக்கும் இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி 1296 மையங்கள் மற்றும் 5 நடமாடும் மருத்துவ குழுவின் மூலம் அளிக்கப்படுகிறது. இப்பணிகளில் 836 மருத்துவ பணியாளர்கள் 2592 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணிகளுக்கு 51 அரசு வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. இத்தடுப்பூசி முகாம்களின் மூலம் அரியலூர் மாவட்டத்தில் 175701 குழந்தைகள் பயன்பெறவுள்ளனர். இத்தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது, அரசால் இத்தடுப்பூசி குளிர்பதின தொடர் சங்கிலி முறையில் பாதுகாக்கப்பட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி அளிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு நிமோனியா, வயிற்றுப்போக்கு, கருவிழி பாதிப்பு, பார்வை இழப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது.

மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்படுவதால் வருங்காலத்தில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய் வராமல் பாதுகாக்கலாம் மற்றும் கருவுற்ற பெண்களை ரூபெல்லா தாக்கும்போது பிறக்கும் குழந்தைகளுக்கு பிறவியிலேயே ஏற்படும் காது கேளாமை, கண் புரை, இருதய கோளாறு, சிறிய தலை, வளர்ச்சி தாமதம், மூளை வளர்ச்சி குன்றியிருத்தல், கல்லீரல் மண்ணீரல் பாதிப்பு போன்ற பாதிப்புகளிலிருந்து இத்தடுப்பூசி அளிக்கப்படுவதன் மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

எனவே, அனைத்து பொதுமக்களும் தங்களின் 9 மாதங்கள் நிறைவடைந்து, 15-வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கு பிப்ரவரி 2017 மாதம் நடைபெறும் இத்தடுப்பூசி முகாம்களில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.பா.ரெங்கராஜன், இணை இயக்குநர் சுகாதாரம் திரு.எஸ்.சோமசுந்தரம், கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்